Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ ஆனி ௴ உசஉ வெள்ளிக்கிழமை (8 JULY. 1955) [இல - கச]

# மனையியல் அறிவின் மாட்சி

## போதனை சாதனை பொருந்தலின் சிறப்பு

மனையியலும் மனையாளும் என்பதுபற்றிச் சிந்திக்கும்பொழுது "பாழே மடக் கொடியில்லாமனை" என்ற பெரியார் வாக்கைச் சற்று ஊன்றி நோக்குவோமேயாயின் மனைக்கும் மனையாளுக்கும் உள்ள தொடர்பு எம் உள்ளத்தில் தோன்றும். மனை என்பது ஒரு சாதாரண விளையாட்டிடம் அல்ல. அதில்தான் எமது சீவனோபாயம் தங்கியுள்ளது. அதன் அழகுதான் எங்களை அழகுறச் செய்கின்றது. வீட்டின் இயல்பைப்பற்றிச் சொல்லும் மனையியல் சாத்திரத்தை ஓரளவுக்கு மனையாள் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவள் தன் குடும்பத்தில் சந்தோஷத்தையும், அழகையும், பொலிவையும் பொருள் வருவாயையும் பெற்று மனையின் கணமாண்புடன் வாழமுடியும். இடையில் ஒரு கேள்வி. ஏன்? மங்கையர் என்றால் மனையியல் கற்றுத்தான் ஆக வேண்டுமா என்று எழுகின்றது. சமையற்காரன் எல்லாம் தானே பொறுப்பாக நடாத்துகின்றபொழுது நாமேன், வீண் சிரமப்படவேண்டும்? என்று கேட்கலாம். அதற்கும்தான் விடையுண்டு. அப்படி வேலையாட்களை வைத்துக் காரியங்களை நடத்துவிக்கின்ற பொழுதும் மனையியல் அறிவு படைத்த மங்கையாயின வீட்டின் பொறுப்பில் சிரத்தை காட்டுவாள். மனையியல் என்றால் சமையல் மாத்திரம்தான் என்று ஒரு சிலர் நினைத்துவிடுகிறார்கள். மனையியல் என்பது வீட்டின் சகல காரியத்திலும் ஊக்கமெடுத்து செவ்வனே அவற்றைப்பேணிப் பாதுகாததற்குரிய முறைகளை கூறுவதேயாம். வீடு, சுற்றுப்புறம் இவற்றைச் சுத்தமாக வைத்திருத்தல், வீட்டுத் தளபாடங்களைச் சிக்கனமான முறையில் அலங்கரித்தல், புது உடைகளைப் புதுமுறையில் தைத்தல், பழைய உடுப்புக்களைப் பழுது பார்த்தல், சுத்தம் செயதல், குழந்தை வளர்ப்பு தன்னையும், தன் கணவனையும், பிள்ளைகளையும் பேணுதல், நோய்கள் அணுகாதவாறு சத்துள்ள உணவுகளை உரிய முறைப்படி பாகஞ்செய்து உண்ணுதல், நோய்வந்தவிடத்தும் உறுதியோடு பராமரித்தல், ஓய்வு நேரத்தை நல்வழியில் செலவழித்தல் ஆகியவற்றால் வரவுக்கேற்ற செலவு செய்து, வாழ்க்கையில் வெற்றி காண்பதுடன், மற்றும் பெண்மணிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் இலங்குவாள்.

அப்படியானால் மனையியல் சாஸ்திரம கல்விச் சாலையில் தான் கற்றுத் தேறவேண்டுமா? என்று கேட்கப்படுகிறது. இதோ அதற்கும் பதில். வீட்டிலேயே தினமும் வாழ்க்கையில் முறைப்படி தெரிந்த தாய்மார்கள் நடத்தும் வீட்டு வேலைகளைக் கவனித்து அவற்றில்பங்கு பற்றும் பிள்ளைகளுக்கெல்லாம் கல்விச்சாலையில் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. அவர்கள் சாதனையிலேயே நேரில் விடயங்களை அறிந்து அவற்றைப் பழகிக் கொள்கின்றனர். போதனையிலும் சாதனையே சிறப்புடைத்து. எனவே அவர்களுக்கு இயல்பாகவே மனையியல அறிவு கிடைத்துவிடும். ஆனால் எல்லாத் தாய்மார்களும் மனையியல் அறிவு நிரம்பிய மனைக்கிழத்திகளா? அப்படி அறிவு, ஆற்றல் இருந்தபோதிலும் முறைப்படி நடத்துவார்களா? என்பதைச் சிறிது சிந்திக்க வேண்டும். அத்தகைய தகுதியில்லாத தாய்மார்களிடத்து வளரும் பெண் குழந்தைகளுககுப் புகலிடம அளிப்பது கல்விச் சாலையே. அவர்கள் வாழ்க்கையைச் சீருடன் செலுத்த வழிகாட்டுவது கல்விச் சாலையே. அங்கு போதனை சாதனை ஆகிய இரண்டினாலும் போதிய மனையியல் அறிவைப் பெறமுடியும். அப்படிப் பெறும் அறிவைக்கொண்டு சிறிய மனையையும் பெரிய மனையாக மாற்றலாம்.

மனையியற் சாத்திரம் கற்பதோடு மாத்திரம் அமைந்துவிடாது அதைச் சிறிது சிறிதாக நம் வாழ்க்கையிலும் பிரயோசனப்படுத்திக்கொண்டு வரவேண்டும். அப்போதுதான் கற்றதன் பயனை அடையக்கூடியதாக இருக்கும். மனையியலிற் பெரும்பாகம் சமையலறையுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றது. சமையலறையிற் பொருட்களை வைக்கும்முறை அவற்றைச் சுத்தமாக வைத்திருத்தல், குறைந்த செலவிலே நல்ல முறையிற் பாகம்பண்ணுதல் அவற்றைப் பரிமாறல் என்பவற்றில் திறமையாகவும், உற்சாகமாகவும் இருக்கும் மங்கையர் தம் வாழ்க்கையில் மாண்புடையகளிராக இருப்பர் என்பது யாவரும் அனுபவத்தில் கண்ட உண்மை. நாடகக் கலை, நடனக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்ற நுண்கலையின் பிரிவுகளில் பெண்கள் ஆற்றல் வாய்ந்தவர்களாக வேண்டும் என்று அவாவுகின்றனர். அவற்றைப்போலவே குடும்ப நிர்வாகமும் . பெண் இனத்தார்க்கு ஒரு நுண்கலையேயாம். இக்கலையைப் பெண்கள் ஆர்வத்துடன் அறிய முயன்றால் இன்பம் அடைதல் மிக மிக எளிதாகும். "குடும்ப காரியங்களில நான் எதற்கும் தலையிடத் தேவையில்லை. அதற்கெல்லாம் வேண்டியவர்கள் இருக்கின்றார்கள்" என்று இறுமாப்புப் பேசுவதிலும், "என் குடும்ப வேலைகளையெல்லாம் நானே கவனித்துக் கொள்ளுகின்றேன்" என்று சொல்வதே எம்மனோர்க்குப் பெருமையும் பேறும் தருவதாகும். எனவே மனையியலாகிய மாண்புடைக் கலையை மங்கையர்களே நீவிர் வீட்டிலிருந்தோ பாடசாலையில் இருந்தோ அறிந்து அதற்கேற்ப உங்கள் மனைகள் எல்லாம் வளம் பெறச்செய்து வாழ்க்கையில் ஓர் உன்னத நிலையை அடைமின். மனைவிளக்கென [illegible]

[illegible]

# பாலை நிலத்தின் பயங்கரத் தோற்றம்

## குமரவேள் வரவால் குளிர் சோலையான காட்சி

நம் பண்டைத் தமிழ் மக்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்தார்கள். அவையாவன முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன சிலர் நிலம் நான்கெனவே கொண்டு இந்த நான்கு நிலங்களும், மழை பெய்யாத காரணத்தினாலும், வேறு காரணங்களாலும் தம் இயல்பு திரிந்து பாலையாகும் எனப்பகருவர். அகப்பொருள் நூலார்க்கு பிரிதல் என்னும்

ஸ்ரீ வ. குகசர்மா

துறைக்கு இந்நிலம் மிகவும் அவசியமாகின்றது. இவ்வுலகத்தை மாயையெனச் சமய நூலார் சாற்றுவர். மாயை எங்கட்கு இன்பத்தையும் துன்பத்தையும் மாற்றிக் காட்டி பேரின்ப வழிக்கு எங்களை இழுத்துச் செல்கிறது. இதனாலே "விடிவாமளவும் விளக்கனைய மாயை" என்றார் திருவருட்பயன் ஆசிரியரும். துன்பநிலையைக் கண்டால் தான் இறவா இன்பமாகிய முத்திநிலையில் மனம் அவாவும். "வெவ்வெயில் வருத்தமுற்றார் மெந்நிழல் விருப்புமாபோல" என்று கூறுகின்றது திருவாதவூரடிகள் புராணம்.

அக்கினி தேவனுக்கு இருப்பிடமெனத் தோற்றமளிக்கும் இப் பாலைநிலத்தில் சில தாவரங்களும் பிராணிவர்க்கங்களும் காணப்படும். காரை சூரை, கள்ளி, முள்ளி முதலான செடிகள் அங்கு காணப்படும். பாலை நிலத்தின் அதிக உக்கிர நிலையைப் புலப்படுத்த புலவர்கட்கு இந்தச் செடிகள் உதவுகின்றன.

"பொரிந்த காரை எரிந்த சூரை
புகைந்த வீரை பொடிந்தவேல்"

எனச் சயங்கொண்டார் கூறுகிறார்.

"கள்ளிபட்டன பாலையும்
தீர்ந்தன கரிந்து
முள்ளி பட்டன வெந்தன
குராமரம்......"

எனக் கச்சியப்பர் கூறுகிறார்.

அந்நிலத்தின்கண்ணே மான், மரை, யானை முதலிய மிருகங்களும், பாம்பும், பருந்து முதலிய பறப்பனவும் இருக்கும். பகற்காலத்திலே கடும்வெயிலில் மிருகங்களின் கண்பார்வைக்கு தூரத்தே நீர் ஓடுவதாகத் தெரியும். இதனைக் கானல் நீர் எனவும், பேய்த்தேர் எனவும் அழைப்பர். இவற்றை நீரோட்டமெனநினைத்து மான் முதலிய மிருகங்கள் ஓடிச்செல்லும். மக்களாகிய யாமும் அப்படித்தான் பொய்யாகிய இன்பம் என்னும் கானல் நீரை மெய்யென நினைத்து ஓடி இளைத்து மேலும் துன்பத்தைத் தேடிக்கொள்ளுகிறோம். அவ்வாறு ஓடி இளைத்தால்தானே இறைவனில் மனம் நாடும். கானல் நீரை மெய்யென நம்பி அங்கும் இங்கும் ஓடி இளைத்த மான்கள் அக்கினியின் வாயிலிருந்து வந்த நீராயிருந்தாலென்ன, அல்லது நஞ்சாயிருந்தாலென்ன? அது நீர் உருவமாக மாத்திரம் இருந்தாற் போதும். அவை யுண்ணத் தயாராய் விடுகின்றன. அதிகமான உஷ்ணத்தினாலே பாலைநிலத்திலுள்ள செந்நாய்களின் நாக்கில் நீர் ஊறும். அவைகள் நாக்கை வெளியில் தொங்க விட்டுக் கொள்ளும். நீர் தேடி வருகின்ற மான்கள் தங்களுக்கு நீர் கிடைத்துவிட்டதெனச் சந்தோஷம் அடைகின்றன. நடப்பதென்ன காண்போம்.

"செந்நாயின் வாயினீர்
தன்னை நீரென
நவ்வி நாவினால்
நக்கி விக்குமே"

நாங்களும் நீர் வேட்கை கொண்டு அலைகின்றன. அவைகளுக்கும் நீர் கிடைத்து விடுகின்றன. எப்படி? "கொடிய வெம்பணிகால் நஞ்சு தன்னையும் அருந்துவ ஞமலி நீர் நசையால" என்றபடி.

வெயிலின் கொடுமையால் மூங்கில்கள் வெடித்து முத்துக்களைச் சிதறும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சி ...

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹூ ஆனி மீ
உசஉ வெள்ளிக்கிழமை


## கொண்ட கோலம் குரூரமாகிறதா ...?

போர்த்துக்கேயர் ஆதிக்கம் நிலவும் கோவா பரத நாட்டுக்குரியது. ஆங்குள்ள மக்கள் அதனை புறநாட்டு ஆதிக்கத்தினின்றும் விடுதலை செய்விப்பதற்கு அன்பு மார்க்கச் சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் கையாண்டு வருகின்றனர். அதனை வேரோடு களைந்துவிடலாம் என்று நிலவெறி பிடித்த நெறியறியாத போர்த்துக்கேயர் தறுகணளத் தன்மையிலே பொல்லால் அடித்து இந்தியத் தொண்டர்களை நையப் புடைத்துவிட்டாற் சத்தியாக்கிரகிகள் பயந்து பின் வாங்கி விடுவார்களென்று நடந்துகொள்ளும் மனிதப் பண்பாடற்ற மிருகத்தனமான வழியிற் செல்வதை நோக்கும்பொழுது மூன்றாவது பெரும்போர் இங்கேதான் ஆரம்பமாகுமோவென அஞ்சவேண்டியிருக்கின்றது.

போராயுதம்மா துமின்றி அன்புத்தொண்டே படைக்கலமாகக் கொண்ட சத்தியாக்கிரகிகளைத் தாக்கிக் கொலைபுரியும் கோவாப் பாடிகாவலப் படையினர் கோழையர் என்றதை உலகம் அறிந்துவிட்டது. வன்கணாள வழிசென்று சத்தியாக்கிரகிகளைத் தூரத்துவதற்குத் துணிந்த போத்துக்கேயரின் விலங்கின மனப்பான்மை வெளியாகிறது. கை இழந்து கால்முறிந்து உடல் நலிந்து நிலத்திலே தவழ்ந்தானும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை இந்திய மக்கள் தொடர்ந்து நடத்துவார்களென்பதைப் போர்த்துக்கேயர் அறிந்துகொள்ளக் கூடிய அறிவாற்றல் படைத்தவர்களல்லர் என்பதுவும் புலனாகின்றது. இந்திய நாட்டிற்காக பாரதப் பெருமக்களுக்காக கோவா வை மாபாவிகளின் ஆட்சியிலிருந்து விடுதலைசெய்து தாய நாட்டுடன் ஒருங்கு சேர்க்க எழுந்த உண்மையியக்கத்துக்காகப் பணியாற்றிய தொண்டர் படையினர் வன்முறையிற் கொல்லப்பட்டதொன்றே போத்துகலின் ஆற்றாமையைக் காட்டுகின்றது.

கோலுக்கும் குண்டுக்கும் கொடுங் கண்டனைக்கும் கொலைக்கும் சத்தியாக்கிரக உத்தமர்கள் அஞ்சமாட்டார்கள். அஞ்சிப்புறங்காட்ட எண்ணவும் மாட்டார்கள். இருபதாம் நூற்றாண்டிலே மனிதஉரிமையாம் மாண்புக் கொள்கைக்கு ஐக்கியநாட்டமைப்புப் போன்ற நிலையங்கள் உழைக்கும் காலத்திலே பிறப்புரிமைப் போராட்டத்தை மறக் கொடுமையாற் றடுக்க முடியுமென்று போர்த்துக்கேயர் நினைக்கின்றார்கள். சந்திரசூரியர்கள் உள்ளளவும் எந்தவிடத்திலும் எதற்காகவும் சத்தியத்தைக் கைநவற விடாது மனிதத் தத்துவத்துக்காக உழைத்து உயிர் விடநேரினும் ஒருப்படுவதே உயர்ந்த நெறியென்ற பண்பாடுடைய பாரத மக்களின் வீரத்தைப் போத்துக்கேயர் அறியமாட்டார்கள். அறிந்தால இந்த அறவழி இயக்கத்தைத் தடுப்பார்களா? அயல்நாட்டு மண்ணின்மேல் ஆசையை விடமாட்டார்களா? ஆசிய மனிதவெள்ளம், ஆருயிரை வெறுத்து அறத்திற்காக, அரசியல்நெறித் திறத்திற்காக, ஒன்று சேர்ந்தால, மேலைநாட்டு வல்லரசுகள் பல கூடினும் உண்மை இயக்கத்திற்குரிய வெற்றியைத் தடுக்க முடியுமா? போத்துகேய மககளே! அரச அதிகாரிகளே எண்ணிப் பாருங்கள்! பகியைப் பெருக்கி அழிவைத் தேடமுன் விழிப்படையுங்கள்.

சென்னையிலிருந்து

# திருப்புகழ், பசனைக்குழு

## இலங்கை எங்கணும் சுற்றுப் பிரயாணம்

கதிர்காம உற்சவத்தின் போது தமிழ்நாட்டில்சென்னையிலிருந்து 52 பேர் கொண்ட ஒரு திருப்புகழ்ப் பசனைக் குழுவினர் இலங்கைக்கு வருகின்றார்கள். இந்தக் குழுவினரில் ஆண்களும் பெண்களும் சிறந்த சொற்பொழிவாளர்களும் உளர். இவர் ஆடி (யூலாய்) மாதம் 28-ந் திகதி யாழ்ப்பாண விமான நிலையத்தில் வந்து சேர்வார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து விசேட விசைவண்டி (பஸ்) மூலம் திருப்புகழ்க் குழுவினரின் யாத்திரை ஆரம்பமாகி மூறிகண்டி, தான்தோன்றீசுவரன், குமாரபுரம் தரிசித்து திருகோணமலை தம்பலகாமம், கிரினா, பொல்லநறுவா முதலிய இடங்களைப் பார்த்து, மட்டக்களப்புக் கூடாக கதிர்காமம் செல்வார்கள். அங்கிருந்து மாத்தறை, காலி, களுத்துறைக்கூடாக கொழும்பில் ஆடிவேல் உற்சவத்தில் பங்குபற்றிவிட்டு, களனிபார்த்து பின்னர் இரத்தினபுரிக்கூடாக சிவனொளிபாதம் செல்வார்கள். அங்கிருந்து நுவரெலியா, ஹற்றன், நாவலப்பிட்டிகூடாக கண்டி முதலிய இடங்களைப் பார்த்து குருநாகல் வழியாக முனீஸ்வரம் சென்று புத்தளம், அனுராதபுரம் பார்த்து திருக்கேதீஸ்வரம் செல்வார்கள். அங்கிருந்து வவுனியாவுக்கூடாக உருத்திரபுரம் சென்று பின் யாழ்ப்பாணத்தில் முக்கிய இடங்களைப் பார்த்துவிட்டு விமான மூலம் சென்னைக்குப் பயணமாவார்கள.

இத்திருப்புகழ்ப் பசனைக் குழுவினர் ஏறக்குறைய 15 நாட்கள் இலங்கையில தங்குவார்கள். இந்தச் சுற்றுப் பிரயாணத்தின் போது ஆங்காங்கு பசனையும், சொற்பொழிகளும் செய்வார்கள். இவர்களுக பிரயாண வசதிகளையும் ஏனைய ஏற்பாடுகளையும் அகில இலங்கைக் காந்திய சேவா சங்கக் காரியதரிசி திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் செய்து வருகின்றார்கள். இந்தப் பசனைக் குழுவினரை குறித்த சுற்றுப் பிரயாணத் திட்டத்தின்போது வரவேற்று பசனையும் சொற்பொழிவுகளும் நிகழ்த்த விரும்புவோர் திரு சி. க. வேலாயுதபிள்ளை, நீர்வேலி PO என்றவிலாசத்துக்கு எழுதி ஏற்பாடு செய்து கொளளலாம்,

குறித்த திருப்புகழ் பசனைக் குழுவில் எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், சிறந்த பக்திப் பாடகர் — பாடகிகளும் அடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. இவ்விதமான பசனைக் குழுவினர் - சொற்பொழிவாளர்கள் இந்த நாட்டின் மூலைமுடக்குகள் எல்லாம் போக வேண்டும். இதனல் மக்களிடையே பக்திப் பிரவாகமும, அறிவு வளர்ச்சியும், புத்துணர்ச்சியும் ஏற்படும்.

இந்தக் காலத்தில் பல் வேறுநாடுகளிடையே கலாசாரகுழு, வர்த்தகக்குழு, நல்லெண்ணக் குழு, விளையாட்டுக் குழு என்றெல்லாம் பல குழுக்கள் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. தமிழ் நாட்டில் இருந்து வரும் இத்திருப்புகழ் பசனைக் குழுவினர் அகவாழ்வுக்கு உணவு ஊட்டுவதற்கான ஆக்கமும், உரமும் அளிக்கும் ஆத்மீகப் பணிகளுக்காகவே வருகின்றார்கள். இவ்விதமான ஆத்மீகக் குழுக்கள் நன்கு படித்த கல்விமான்களை, எழுத்தாளர்களை, சிந்தனையாளர்களை, கருத்துப் புரட்சியாளர்களை அடக்கிக் கொண்டு புறப்படுவது நாட்டின் புனருத்தாரணத்தின் பல படிகளை ஆக்கியதாகும். ஆகவே இக குழுவினரை நன்குபயன்படுத்திக்கொள்ளுதல் மிக விரும்பவேண்டியதொன்றாகும்.

## வண் வைத்தீசுவரசுவாமிகோவில் தேவி உற்சவம்

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர சுவாமி கோவில் தேவி உர்சவம் நிகழும் மன்மத வருஷம் ஆனி மீ 30உ வியாழக்கிழமை ஆரம்பமாகி ஆடி மீ 6-ந் திகதி (22-7-55) வெள்ளிக்கிழமை இரதோர்சவமும் அடுத்த நாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும்நடைபெறும்.

புத்தளத்தில்:

# முத்தமிழ் விழா

புத்தளம் முத்தமிழ்விழா சிறந்த ஊர்வலம், கொடியேற்றம் ஆதியனவற்றின பின் ஆரம்பமாயது. திரு. கே. எஸ். அருள்நந்தி அவர்கள் தலைமை வகித்துப் பேசும்போது பழங்கதை பேசுவதிற் பயனில்லை என்பதை எடுத்துக் காட்டி முத்தமிழையும வளர்க்க வேண்டிய தேவையை விளககினர்.

ஸ்ரீ வி. நல்லையா அவர்கள பேசும்போது:—

"தமிழ்மொழி தெய்வத் தன்மை வாய்ந்தது; இதை மொழிக்க எந்த அரசாங்கத்தாலும்முடியாது. தமிழ் மிகப் பழையமொழிஎன்று நிரூபிக்கமுடியும். இம்மொழியை ஒருவராலும் அழிகக முடியாது இப்பாஷையை ஒழுப்பதற்கு எந்த அரசாங்கத்தாலும் முடியாது.

இப்பொழுது தமிழரா சிங்களவரா சிறுபான்மையினராயிருக்கின்றனர்? தமிழர் சிறுபான்மையினரல்ல. முஸ்லிம்கள் சிறுபான்மையினரலல. சிங்களவர்தான் சிறுபான்மையினர். தென்கிழக்காசியாவில் 500 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்றனர்.

திரிகோணமலைத் துறைமுகமும் மட்டக்களப்பு வயல்களும் எங்கள் வசம் இருக்கையில் நாம் அஞ்சத் தேவையில்லை. மேலும் நாம் சிறுபான்மையினரல்ல! சிங்களவர் எங்களுடன் சந்தோஷமாகநடந்து கொண்டால் நாம் ஒற்றுமையாய் இருப்போம் என்று கூறினர்.

பாராளுமன்ற உபசபாநாயகர் அல்வாஜ் எச். எஸ். இஸ்மாயில் தாய்மொழியாகிய தமிழ் வளர்ச்சிககு ஊக்கமளிகக வேண்டும் என்றுகூறினர். "காவிய உலகில் இளங்கோ" என்னும் பொருள்பற்றி வித்துவான் க. வேந்தனர் பேசினர்.

---

## திருமணம்

சிவகுமாரன் — புனிதவதி

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை வைத்தியகலாநிதி வ. த. பசுபதி தம்பதிகளின புத்திரன் நியாயவாதி திரு. சிவகுமாரனுக்கும் 'ஈழகேசரி' பொன்னையா தம்பதிகளின புத்திரி செல்வி புனிதவதியாருக்கும் சென்ற புதன்கிழமை சுபயோக வேளையில் மணமகள் இல்லத்திலே திருமணம் சிறப்புற நிகழ்ந்தது.

வியாழக்கிழமை மாலை மணமகன் இல்லத்தில வரவேற்பு அழகாய் நடைபெற்றது. இவ்விரு நாட்களிலும் மணத் தம்பதிகளின் நண்பர் சுற்றத்தவர்கள் பெருந்தொகையினராகச் சமூகமளித்து ஆசீர்வதித்தனர்.

இம் மணத் தம்பதிகள் இறைவன் அருளால் இலலறச் செம்மையும் பல்லாண்டு வாழ்க்கையும்பெற்றின்புறற்றிருப்பார்களாக.

---

## மேலைப்புலோலி சைவ வித்தியாசாலை

சைவத்திற்கும் தமிழிற்கும் பெருஞ்சேவைபுரிந்த யாழ்ப்பாணம் மேலைப் புலோலி வித்துவான் நா. கதிரவேற்பிள்ளையவர்களையும், பெயரும் புகழும் விரும்பாதுவாழ்ந்த,வாழும் அறிஞர் பெருமக்கள் பலரையும் உலகிற்குவந்தளித்து, பலலாண்டு காலமகுன்றாப் புகழ்பெற்று நிலவிவருவது "மேலைப் புலோலிச் சைவப்பிரகாச வித்தியாசாலை".

இதன் வைரவிழாக் காணும் பேறுபெற்ற மேலைப் புலோலி, சிவஞானப்பிரகாச சபையாரின பேருதவியால், வித்தியாலய தரும பரிபாலகரும் முகாமைக்காரனுமாய ஸ்ரீ ஆ. சி. நாகலிங்கபிள்ளையவர்களின் பெருமுயற்சியால கெம்பீரமாக எழுந்துநிற்கும் இதன் புதுமண்டபத் திறப்புவிழா நிகழ்ந்தது 1955 ஆனி (ஜூலை) 30ம் திகதி வியாழனன்று.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் திருவடி பதித்துச் சொன் மழை பொழிந்த இவ் வித்தியாலயம் சைவமும் தமிழும் நன்கு பேணி வளர்த்து இனிதோங்குக.

—0—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயம் வளர வழிகள்

## அறிவு ஒழுக்கங்களின் இன்றியமையாமை

(திருசிரபுரம் சைவசித்தாந்தசபை ஆண்டுவிழாவில் கலாநிதி மா. இராசமாணிக்கனுர் நிகழ்த்திய தலைமைப் பேருரை)

"மிகப் பழமை வாய்ந்த சமயங்களுள் முதன்மை பெற்று விளங்குவது சைவ சமயம். அது காலம் கணித்தறியமுடியாத பழமை வாய்ந்தது" என்று சர் ஜான் மார்ஷல் போன்ற மேனட்டு ஆராய்ச்சி அறிஞர் கூறியுள்ளனர்.

சிவநெறிக்கு அடையாளம் இலிங்க வணக்கம். நமது தமிழ்நாட்டில் முடிமல்லம், களத்தூர், குடுமியான்மலை என்னும் ஊர்க் கோவில்களில் உள்ள இலிங்கங்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமையுடையன. சங்க காலத்தில் குறிஞ்சி முதலிய நிலங்களுக்குரிய முருகன் முதலிய தெய்வங்கள அவ்வத்திணைக்குரிய தெய்வங்களாக இருந்தன. ஆனல் சிவநெறியே முழுமுதற் கடவுள் வணக்கத்திற்குரிய நெறியாக இருந்தது. காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த கோவிலகளின் வரிசையில் முதற் கோவிலாகச் சிவன் கோவிலே மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் பாடிய சமணராகிய இளங்கோவடிகளும மணிமேகலை பாடிய பௌத்தராகிய சாத்தனுரும் சிவன் கோவிலை முதலில் வைத்துக் கூறியதை நோக்க, அவர்கள் காலத்தில் தமிழகத்தில் சிவநெறி பெற்றிருந்த தலைமையை நன்கு உணரலாம்.

### பல்லவர் காலத்தில்

சங்க காலத்திற்குப் பின்பு, தமிழருள் தொழில் பற்றியிருந்த பிரிவுகள், பிறவிபற்றியிருந்த பிரிவுகளாக மாறிவிட்டன. இதனல் சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் தலை தூக்கின. பல்லவர் காலத்தில வடமொழியாளர் நுழைவு மிகுதிப்பட்டது, ஒரு குலத்திற்கு ஒரு நீதி கூறும் மனுதர்மம் தமிழகத்தில சட்டநூலாக வேரூன்றியது. "நான் மனுதர்மப்படி நாட்டை ஆள்கிறேன்" என்று பெருமை பேசிக் கொண்ட அரசர்கள் வாழ்ந்த காலம் அது. இதனல தமிழ்ச் சமுதாயம் நாளடைவில் கணக்கற்ற சாதிகளைப் படைத்து வேறுபாட்டினை மிகுதிப்படுத்து விட்டது. இந்நிலையில் மக்களை மக்களாகவே கருதிய சாதி வேறுபாடு அறியாத—சமணமும் பௌத்தமும் இந் நாட்டில் செல்வாக்குப் பெறலாயின. இவ்விரு சமயத்தவரும் பொது மக்களுக்குக் கல்வியும் மருத்துவமும் உதவினர்; எல்லா மக்களையும் ஒரு தாயீன்ற பிள்ளைகளாகக் கருதினர். சமுதாயத்தில் சாதிவேறுபாடுகளால் அல்லலுற்ற மக்கள் பலர் இச் சமயத்தவர் புரிந்த கல்வி, மருத்துவ உதவிகளைப் பாராட்டி இச் சமயங்களைத்தழுவினர். இத் தழுவலால் சைவமும் வைணவமும் வலிமையும செல்வாக்கும் குறைந்து காணப்பட்டன.

இந் நிலையில் கி. பி. 7ம் நூற்றாண்டில் அப்பரும் சம்பந்தரும தோன்றினர்; பக்தி நெறியைப் புகுத்தினர்; சைவர்க்குள் வேறுபாடு கூடாதென்றனர். சமணரையும் பௌத்தரையும் இழித்துக் கூறிச் சில அற்புதங்களைச் செய்து காட்டினர்; எவரும் உண்மையான அன்புடன் இறைவனிடம் பக்திகொண்டால் சிவ பதவி அடையலாம் என்றனர். அக்காலத்தில் மக்கள் உள்ளங்களைக் கவரக் கோயில்களில் ஆடல் பாடல்கள் உண்டாயின புதிய கோயில்கள் பல கட்டப்பட்டன. ஆங்காங்கு மடங்கள் ஏற்பட்டன. இப் புதிய பக்தி நெறியில் மக்கள் மனம் ஈடுபட்டது. அதனல் சமணமும் பௌத்தமும் செல்வாக்கு இழந்தன.

### சோழர் காலத்தில்

பல்லவர்களுக்குப் பின்பு சோழப்பேரரசு நானூறு வருடகாலம் இந் நாட்டை ஆண்டது. அக்காலத்தில் வானளாவிய கற்கோயில்கள் கட்டப்பட்டன; மடங்கள் பெருகின; மடங்களில் பொதுக்கல்வியும் சமயக் கல்வியும் புகட்டப்பட்டன. விழாக்கள் மிகுந்தன. நாயன்மார் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஓவியத்திலும் சிற்பத்திலும காட்டப்பட்டன. சைவத் திருமுறைகள் நாட்டில்பரவின. சோழப் பேரரசரும் சிற்றரசரும் குடிகளும சமய வெள்ளத்தில ஆழ்ந்திருந்தனர். சித்தாந்த சாத்திரங்களும் எழுதப்பட்டன. இதிகாசங்களும புராணங்களும் சித்தாந்தசாத்திரங்களும் கோவில்களில் பேசி விளக்கப்பட்டன. சுருங்கக் கூறின, தமிழகத்தில கி. பி. 7ஆம் நூற்றாண்டில் தொடங்கிய சைவ வெள்ளம் கி. பி. 1300 முடியப் பெருக்கெடுத்து ஓடியது என்று கூறலாம்.

### சைவத்தில் தவறுகள்

இங்ஙனம் சைவ சமயம் செல்வாக்கோடு விளங்கிய போது, வைணவத்தோடு மாறுபட்டது. அதனை அடக்கவும் பகைக்கவும் முயன்றது. அத்துடன் அது சைவ மக்களை ஒற்றுமைப்படுத்தத் தவறிவிட்டது. சைவசமயத்தார் பல நூறு சாதிகளாகப் பிரிந்திருந்தனர். இன்ன வகுப்பார் காலில் செருப்பணிதல் கூடாது, இன்ன வகுப்பார் மாடி வீடு கட்டக் கூடாது, இன்னின்ன வகுப்பார் கோவிலுக்குள் வரலாகாது என்றெல்லாம் கண்டிப்பான வரையறைகள் இருந்தன. இவ்வரையறைகளால், மக்கள் மனமைதியின்றி புண்பட்ட நெஞ்சுடன் அரசன் ஆணைக்கு அஞ்சி வாழ்ந்து வந்தனர். சுருங்கக் கூறின், அக்காலத் தமிழ்ச் சமுதாயம், யானை நோய் பிடித்த விளாம்பழம்போல இருந்தது என்று கூறலாம்.

### முசுலிம் படையெடுப்பு

வெளித் தோற்றத்தில் சமய வளர்ச்சியும் மனக்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## ஆராய்ச்சியினும் அமைதி வேண்டும்

உலகினர் நலமுறற்கேற்ற ஆராய்ச்சிகள் பல மொழித்திற ஆராய்ச்சி ஒருபுறம். சமய ஆராய்ச்சி ஒருபுறம்; தொழின் முறை ஆராய்ச்சி ஒருபுறம்; அணுக்குண்டுப் பரீட்சை மற்றோர் புறம். இவ்வாறாக ஆராய்ச்சிகள் நிகழ்கின்றன. அந்தணர் என்ற சொல்லாய்வும் நமது சாதனத்தில் சாதித்து வெளிவருகின்றது. அந்தண்மை பிராமணர்க்குரியதே.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும்" என்பதில் அந்தணர் என்பது பிராமணரைக் குறிப்பிடப்பட்டது. திருமூலநாயனர்,

"அந்தணராவோர் அறுதொழில் பூண்டுள்ளோர்"

என்பர்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று பல இடங்களில் காணலாம். பார்ப்பார் "படிப்பவர்" என்று புறப்பொருள்கூறுவது தவறாகும். பிராமணரையே பார்ப்பார் என்று வழங்குவர். இலங்கைப் பல்கலைக்கழகத்து விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தனர்கள் எழுதிய "தமிழர் சால்பு" என்ற அரிய ஆராய்ச்சி நூலில் 35—36-ம் பக்கங்களை ஐயுறவடையும் அன்பர்கள் படித்து அமைவது நன்று. அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்-நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே என்பதும் நோக்குக.

வ. மு. இரத்தினேசுவரஐயர்

உடுவில்
4—7—55

# சேர் கனகசபை வித்தியாசாலை

## வளர்ச்சிச் சிறப்பில் முன்மாதிரி

இப்பாடசாலை கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த அம்பலவாண உபாத்தியாயரவர்களால் ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன் அயற் கிராமமாகிய விளிசிட்டியிற்ருபிக்கப் பெற்றது. இவர் தமது பாடசாலையிற் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு இலக்கண இலக்கியங்களையும், சமயக் கல்வியையும், ஒழுக்க முறைகளையும், நன்கு கற்பித்தாரென்பர். அம்பலவாண உபாத்தியாயர் தேகவியோகமடைந்தபின் அவர் மாணுக்கராகிய அருணசல உபாத்தியாயர் அவர்கள் பாடசாலையைச் செவ்வனே நடாத்தி வந்தனர். அக்காலத்திலும் கல்வியபிவிருத்தி போற்றப் பட்டது. அவர் அகால மரணமடைந்தமையினுல் இப் பாடசாலை சிறிது தளர்ச்சியுற்றது; அக்காலத்தில் சைவாபிமானியும், பரோபகாரியுமாய் விளங்கிய பன்னலை சங்கரநாதர் கனகசபைப்பிள்ளையவர்கள், தமிழ்ச் சிறுர்களின் சமய அபிவிருத்தியை அவாவி 1865-ல் விளிசிட்டிப் பாடசாலைச் சொந்தக்காரருடைய முகாமையை ஏற்று இவ்விடத்திலே ஓர் பாடசாலையைத் தாபித்து நடாத்தினர். 1969-ல உதவி நன்கொடைபெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. தெல்லிப் பழைகிராமத்திலே முதன் முதல் உதவி நன்கொடை பெறும் சைவப் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது இதுவேயாகும். அவர் காலத்தில் பாடசாலை எத்துறையிலும் சிறப்புற்று விளங்கியது. இவருடைய முகாமைக்காலம 1865—1872.

பின்பு பிள்ளையவர்களின் மருகரும் நியாயதுரந்தரருமாகிய ஸ்ரீமாந் அ. சம்பந்தர் அவர்களும, அதன்பின் பிள்ளையவர்களின் சிரேஷ்ட புத்திரரும், நியாயவாதியுமாகிய ஸ்ரீமாந் க. மாணிக்கத்தியாகேசர் அவர்களும் அதன்பின் மருகருள ஒருவரும் சமாதான நீதிபதியும் நியாயதுரந்தருமாகிய ஸ்ரீமாந் வ. அப்பர்சுவாமி அவர்களும், அதன்பின் பிள்ளையவர்களின் மருகரும் நீதிபதியும, சமாதான நீதிபதியுமாகிய ஸ்ரீமாந் பூ. வைத்திலிங்கம் அவர்களும முறையே முகாமையை இனிது நடாத்தி வந்தனர். இவர்களுடைய முகாமைக காலம் 1972—1934 வரையுமாகும்.

1935-ம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம பிள்ளையவர்களின் கனிஷ்ட புத்திரராகிய ஸ்ரீமாந் க. சிறீ சுந்தரமூர்த்தியவர்கள் தமது தந்தையாருடைய வித்தியாபரிபாலன கைங்கரியத்தை ஏற்றுர். இவர் நம் பாடசாலை அபிவிருத்தியைப் பெரிதும் விரும்புபவர். விருத்திக்கு வேண்டியனவற்றை உரிய காலத்திற் செய்துமுடிக்கு மாற்றலுடையவர். புதுக் கட்டடங்களையமைத்தும், பழைய கட்டடத்தைப் புதுக்கியும், புதிய தளவாடங்கள் உபகரணங்களை ஆக்கியும், தகுதியான ஆசிரியர்களை நியோகித்தும் பாடசாலையை மிகுந்த சிரத்தையோடு பரிபாலனம் செய்து வருகின்றுர். சமயம், இலக்கியம், இலக்கணம், கணிதம், சித்திரம், சங்கீதம், வீட்டுப்பணி, பன்னம், தையல, தும்புவேலை ஆகிய பாடங்களில் விசேட தராதரப் பத்திரம் பெற்றிருக்கும் ஆசிரியர்கள் நியமிககப்பட்டிருக்கிறுர்கள். 1865-ல் 40 பிள்ளைகளுடனும் இரு ஆசிரியர்களுடனும ஆரம்பித்த இப்பாடசாலை 400 பிள்ளைகளையும் 13 ஆசிரியர்களையும் உடையதாய் இருக்கின்றது.

## எந்தத் திரையையும் காணவில்லை

வியன்னுவிலே பத்திரிகை நிருபர் கூட்டமொன்றில நிருபர் ஒருவர் இரும்புத் திரை மறைவில் கண்டவை பற்றிக் கேட்ட கேள்விக்கு மறுமொழி கொடுக்கும்பொழுது நான் இரும்புத் திரையையோ வேறு எவ்வித திரையையோ காணவில்லை என்று பண்டித நேரு கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயம் வளர வழிகள்

3-ம் பக்கத்தொடர்ச்சி

கசப்பும் நிலவியிருந்த அக்காலத்தில்தான் தமிழகத்தின்மீது முஸ்லிம் (மாலிக்காபூர்) படையெடுப்பு நிகழ்ந்தது. மதுரை மீனாட்சியம்மன் கோவில் போன்ற பெருங் கோவில்கள் தாக்கப்பட்டன. கோவிற் செல்வம் கொள்ளையடிக்கப்பட்டது. குடிகள் மிகவும் துன்பப்பட்டனர். பரம சைவனை பாண்டியன் ஊரை விட்டே ஓடிவிட்டான். தமிழகம் முழுவதும் குழப்பத்துக்கு நிலைக்களமாக இருந்தது. மேற்போக்கில் ஒற்றுமையும் உள்ளத்தில் வேற்றுமையும் கொண்ட சமுதாயம், படையெடுத்தவரை எதிர்த்து நிற்க ஆற்றல் இன்றி அடி பணிந்தது. இந்நிலையில் மக்கள் சிலர் முசுலிம்களாகச் சமயம் மாறித் தங்களுக்கிருந்த சாதி இழிவைப் போக்கிக் கொண்டனர்.

### கிறிஸ்தவ சமயம்

விசயநகர ஆட்சியிலும் இப்பாழ்'கும் சாதி வேறுபாடுகள் ஒழிக்கப்படவில்லை. அக்காலத்தில் தென்னிந்தியக் கரையோரங்களில் மேனாட்டுப் பாதிரிமார் குடியேறினர். நம்மவரால் ஒதுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் கவனிக்கப்படாதிருந்த ஏழை மக்களுடன் பழகி, அவர்களைக் கிறித்தவர்களாக்கி, அவர்களுக்குக் கல்வியும் பிற வசதிகளும் அளித்தனர். இவ்வாறு உயர் வகுப்பினரால் ஒதுக்கப்பட்ட மக்கள், சாதி வேறுபாடேயில்லாத கிறிதவ சமயத்தில் சேர்ந்து நலம் பெறத்தொடங்கிய காலத்தில் இந்நாட்டில் வெள்ளையராட்சி ஏற்பட்டது. அதனால் இந்தியக் கிறித்தவர் நிலையும் உயர்ந்தது. நமது சமுதாயத்தில் கீழ் நிலையில் இருந்த மக்கள் இந்த மாற்றத்தைக் கண்டு கிறித்தவராயினர். உயர் வகுப்பினர் ஒரு சிலர் சமய உணர்ச்சி மேலிட்டும் பதவி காரணமாகவும் இப்புதிய சமயத்தைத் தழுவினர்.

குப்பன் என்ற பறையன் மகன் இஸ்லாத்தைத் தழுவியதும் சமுதாயத்தில் எல்லோருடனும் பழகும் வாய்ப்பைப் பெற்றான். மதம் மாறாத காரணத்தால் அவன் தந்தை தீண்டத்தகாதவனாகவே இருந்தான். அவன் எல்லோரும் நடக்கும் தெருக்களில் நடக்க உரிமையில்லை. பொது இடங்களில் கலந்து பழக வாய்ப்பில்லை. ஆனால் அவன் இஸ்லாத்தையோ, கிறிதவத்தையோ தழுவியவுடன இந்த உரிமைகளைப் பெற்று விட்டான். இக்காட்சியைக் கண்ட பலர் சமயம் மாறினர். இவ்வாறு சைவமும வைணவமும தமது அறியாமையாலும பிடிவாதத்தாலும் தமக்குரிய சவக்குழியைத் தாமே தயாரித்துக்கொண்டன!

### கோவிலில்

தமிழ் நாட்டு மன்னரால் தமிழ்மக்கள் உழைப்பால் கட்டப்பட்ட கோவிலில் — அம் மக்கள் தாய்மொழியில் வழிபாடு இல்லை என்பதை வெட்கத்தோடு கூறவேண்டுபவராக இருக்கின்றோம். தமிழ்மக்களுக்குப் புரியாத வேற்றுமொழியில் வழிபாடு நடைபெறுகிறது. அங்கும் சில ஆண்டுகட்கு முன்வரை பாழான சாதி வேறுபாடுகள் தலைவிரித்து ஆடின அல்லவா? இந்நிலையில் சைவம் எவ்வாறு வளரமுடியும்? மக்களுக்கு எவ்வாறுசமயப்பற்றுண்டாகும்? கோவிலைக் கண்காணிக்குப பலரும் கோவிலைப் பற்றியோ சமயத்தைப்பற்றியோ ஒன்றும அறிந்தவராக இல்லை. சமயத்தைப் பற்றியோ, சித்தாந்த சாத்திரங்களைப் பற்றியோ பெருமுழக்கமிட்டுப் பேசுவோர் பலரும மக்களுக்குப் புரியும் வழியில் - சமயம என்ன, சமயததிற்கும்வாழ்க்கைக்கும் என்னதொடர்பு மனிதன எவ்வாறு சமய வாழ்வு வாழதல் வேண்டும என்பனவற்றைத் தெளிவாகப்பேசாமல், சமயக் கட்டுக் கதைகளைப் பேசி மக்கள் அறிவைப் பாழாக்குகின்றனர். இத்தகைய கேடுகள் பல. இக்கேடுகளை வைத்துக்கொண்டு 'சமயம் வளரவில்லை, நாத்திகம்பெருக்கி விட்டது'' என்று அமைச்சர் முதல் ஆண்டி ஈறாக இப்பொழுது சமய மேடைகளில் பேசுவோர் அனைவரும் ஓலமடுகின்றனர். சமயம் அழிந்து வருவதின் அடிப்படைக் காரணத்தை ஆழ்ந்து சிந்தித்து, இக்குறைகளை நீக்கினல், சமயம் வாழ்வு பெற்று வளர வழியுண்டு.

பௌத்த சமயம் புத்தர்களது, ஒழுக்கத்தாலும அசோகனது ஒழுக்கத்தாலும் சமயப் பிரசாரர் ஒழுக்கத்தாலுமே வளர்ச்சி பெற்றது என்பது வரலாறு கண்ட உண்மை. ஆதலால் சமயத் தலைவர்களும சமயப் பேச்சாளரும பொது மக்கள மதிக்கத்தக்க ஒழுக்கமுடையவராக இருத்தல் இன்றியமையாதது.

சைவசமயம் இன்னது, அதன் கொள்கைகள் இவை, இவற்றை வாழ்க்கையில் பின்பற்றுமவகைஇது, நாயன்மார் மார் வாழ்க்கை வரலாறுகளிலிருந்து அறியத்தருவன இவை, நாம பின்பற்றத் தருவன இவை, சித்தாந்தசாததிரங்களின்கருத்து இது, என்பன போன்ற தலைப்புக்களில், சாதாரண மக்களும படித்து உணரத்தகுந்த முறையில் சிறுநூலகளை அச்சிட்டுவெளியிடுதல் வேண்டும்; இவைபற்றிச் சொறபொழிவுகள நாடெங்கும் நடைபெறச் செய்தல் வேண்டும.

பௌத்தரும், சமணரும பொதுமக்களுக்குத தொண்டு செயதாற் போலவே சைவ மடங்கள் பலதொடக்க நிலைப் பள்ளிகளை உண்டாக்கி, அவற்றில பொதுக்கல்வியும சமயக் கல்வியும் கற்பித்தல்வேண்டும.

சமய நூல்கள் என்று சொல்லப்படுவனவற்றுள் இருக்கும் சமயக் கட்டுக் கதைகளும் சமயச் சொற்பொழிவுகளிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும், அருவருக்கத்தக்க ஆபாசக்கதைகள், இயற்கை நிகழ்ச்சிக்கு மாறுபட்ட செய்திகள் இவற்றைப் பிரசாரம் செய்தல் கண்டிப்பாக நீக்கப்படுதல் வேண்டும. இந்தக் கற்பனைகளே சைவ சமயத்தைப் பாழ்படுத்துவன; நம்மைத் தலைகுனியச் செய்வன. இன்றுள்ள சமய எதிர்ப்புக்கெல்லாம் காரணம இக் கட்டுக் கதைகளே என்பதை நன்குணர்தல் வேண்டும்.

பொது மக்கள் தங்கள்பிள்ளைகளுக்குச் சைவப் பெயர்கள் இட்டு வழங்குதல் சைவத்தை வளர்க்கும் வழிகளுள் ஒன்றாகும்.

சைவர்கள் உள்ளத்தை உருக்கும் திருமுறைப் பாடல்களை நாள்தோறும் படித்து ஒழுக்கத்திலும் சமயப் பண்பாட்டிலும வளர்ச்சியடைதல் வேண்டும.

பணம்படைத்த சைவ நன்மக்கள் சைவசமய நூல்களைப் பொதுமக்களுக்கு ஏற்ற வகையில் அச்சிட்டு இலவசமாக உதவுதல் வேண்டும்.

கிறித்தவக்கல்விநிலையங்கள் நாட்டில் தொண்டு செய்வது போலச சிறப்பாக சைவமக்களுக்கும் பொதுவாகப் பிற மக்களுக்கும் தொண்டு செய்யச் சைவக் கல்வி நிலையங்கள் மிகப் பலவாக ஏற்படுத்தல் வேண்டும்.

### முடிவுரை

காய்தல் உவத்தலின்றி, வரலாற்று அறிவோடு சைவ சமய நிலையைக் கவனிக்குமபடி வேண்டுகின்றேன். உண்மையாக இந்த நாட்டில் சமயம் வளர வேண்டுமாயின், மக்களுக்குச் செய்யும் தொண்டினாலதான வளர முடியும் — கர்ப்பூரத்தால், தேங்காய், பழததால், சுண்டலால், திருவிழாக்களால், சமயக் கட்டுக் கதைகளால் சமயம்வளராது. சைவர் ஒருவரை ஒருவர் மதித்துப் பழகுதல் வேண்டும். சைவ உலகில் எத்தகைய வேறுபாடும்இருத்தல்கூடாது மக்களுக்குச் செய்யும் தொண்டே கடவுளுக்குச் செய்யும் தொண்டு என்பதைச் சைவநன் மக்கள் உணர்ந்து சைவக் கொள்கையை — அன்பே சிவம் என்பதை — வாழ்க்கையில் காட்டவேண்டும். இது ஒன்றுதான் சைவத்தை வாழ்விக்கும்.

— தமிழ் நாடு.

---

## மாயமாய் மறைந்த வைத்திய உபகரணங்கள்

ரூபா இருபதினாயிரம் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் அரசாங்க வைத்திய ஆராய்ச்சி நிலையத்திலிருந்து மாயமாய் மறைந்து விட்டனவாம். வழக்கமான நடவடிக்கைகள் அத்தொடர்பில் எடுக்கப்படுகின்றன.

---

## பண்டித நேருவின் உருசியப் பிரயாணம்

பண்டித நேரு அவர்கள் உருசியாவிற் செய்த பிரயாணத்தின் விபரங்களெல்லாம் ஏறக்குறைய இரண்டு கிழமைகளுக்குள் இந்திய படமாளிகைகளில் காட்சிக்கு வருமாம்.

---

## குரும்பசிட்டி சன்மார்க்கசபை 20-ம் ஆண்டறிக்கை

கிராம முன்னேற்றச்சங்கம், சனசமூக நிலையம் முதலியவாக எட்டுப் பிரிவுகளையுடைய மேற்படிசபையின் 20-ம் ஆண்டறிக்கை அச் சபையினருக்கு உற்சாகமூட்டுந் தன்மையதாயிருப்பதோடு ஏனைய சபைகளுக்கும் முன்மாதிரியாய் அமைகின்றது. தபாற்கந்தோர், தெரு, பிரசவவைத்தியசாலை, விளையாட்டுநிலம் சேமிப்பு, ஐக்கியம், சுகாதாரம், சமயம், கல்வி என்பனவும் பிறவுமாய்ப் பல துறைகளில் தொண்டாற்றி வருவதோடு எடுத்த கருமம் சித்தியெய்தும் வரையும் சபையார் சலியாது உழைக்குந் தன்மையராய் இருக்கின்றனரென்பதைக் குறித்த அறிக்கை நன்கு விளக்குகின்றது. சபைக்குச் சென்ற அறிஞர்களின் பல நல்லுரைகளும் சபையார் பெற்ற விருதுகளும் சபை செய்யுந் தொண்டுக்குச்சிறந்தசான்றுகளாயமைகின்றன.

---

## ஒரு மாணவனுக்கு ரூபா 2000 அரசாங்கச் செலவாம்

கண்டி வித்தியார்த்தக் கல்லூரிப் பரிசளிப்புக் கூட்டத்தில் உள்நாட்டு மந்திரி ஸ்ரீ ஏ. இரத்நாயக பேசுமபோது ஆசியாவில் எந்த நாடும் இலங்கையைப்போல் கல்வியிற் செலவழிப்பதில்லை என்றும் இலங்கைச் சர்வகலாசாலை மாணவர் ஒவ்வொருவருக்கும் அரசாங்கம் ரூபா ஈராயிரம் செலவழிக்கின்றதுஎன்றும் கூறினாராம்.

---

## இந்தியா—பாகிஸ்தான் வாய்க்கால் பிணக்கு

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையில் உள்ள வாய்க்கால் தண்ணீர்ப் பிணக்கில் உலக வங்கியார் இரண்டாம முறை கொடுத்த ஒரு இடைக்காலச் சமாதான ஒழுங்கைப் பாக்கிஸ்தான் ஏற்றுக் கொண்டதாம். அதன் உறுப்புக்கள் இந்தியா அமெரிக்கா பாக்கிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளிலும் ஏககாலத்தில் வெளிவர இருக்கின்றனவாம்.

---

## இந்து ஆலய அறநிலையச் சட்டம்

இந்து ஆலய அறநிலையச் சட்டதிட்டம் விரைவில் சட்டமாக்கப்பட வேண்டுமென்று கொழும்பு விவேகானந்தசபையின் 52-வது வருடாந்தக் கூட்டத்திலே ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

---

## கதிர்காமத்துக்கு ஆகாய விமானம்

திருக்கோணமலைக்கு ஆகாய விமானப் போக்குவரத்து ஒழுங்குகள் நடைபெறுகின்றன. கதிர்காமத்துக்கும் ஆகாயப்பிரயாண ஒழுங்குகள் செய்படக்கூடுமாம்.

---

## காரைநகர்ச் சைவ மகாசபை

மேற்படி சபையினரால் நிகழும் ஆனிமீ ௲௨ (24-6-55) வெள்ளிக்கிழமை பிற்பகல் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசை சிறப்பாக நடத்தப்பெற்றது. அவ்வமயம் சைவப்பிரசாரகர் ஸ்ரீமான். பொ. அப்புக்குட்டி அவர்கள் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகங்களின் சிறப்புகளை எடுத்துரைத்து, அவர்களது வாழ்க்கையைப் பின்பற்றுவதால் நாங்களடையக்கூடிய நன்மைகளை எடுத்துரைத்தனர்.

---

## சிறகுள்ள விமானம்

பறவைகளைப்போல் சிறகடித்துப் பறக்கும் விமானத்தை முதன் முதலாக உருசியா உண்டாக்கியிருக்கின்றதாம்.

---

## சிங்களமே தனி ஆட்சிமொழி ஆக வேண்டுமாம்

அழுத்கமவிலுள்ள ஜாதிககால மண்டலய என்னும் சபையின் பகிரங்கக் கூட்டமொன்றிலே ஸ்ரீ வெலிப்பென்ன உபதிஸ்ஸ தேரோ அவர்கள் தலைமை வகித்துப் பேசும்போது சிங்களமே இலங்கையின் தனி ஆட்சி மொழியாக்கப்படுதல் அக்கூட்டத்தின் நோக்கமென்று எடுத்துக் காட்டினர். ஒன்பது மாகாணங்களுள் ஏழு மாகாணங்களில் வசிக்கும் 65 இலட்சம் சிங்கள மக்கள் தங்கள் இலட்சியத்தை உண்மையாகச் சாதித்தால் சித்தி பெறுதல் கடினமானதல்ல என்றும் சிங்களமே இலங்கையின் தனி ஆட்சிமொழியாக்கப் படுதல் வேண்டும் என்றும் பேச்சாளருக்குப் பின் பேச்சாளராகத் தங்கள் ஆட்சி மொழிக் கொள்கையை வற்புறுத்திப் பேசினார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—O—

வண்ணார்பண்ணை கிழக்கிலிருந்து காலஞ் சென்றுபோன சுப்பையா பரமசாமி மகள் சிவபாக்கியத்திடைய ஆதனத்தைப்பற்றி இறந்தவ

தத்துவ வழக்கு

இல. 1798 T.

எதிராக

வண் – கிழக்கு எஸ். பரமசாமி மகன் சரஸ்வதி தத்துவகாறி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1798 T இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ஆம் ஆவணி மீ 18உ வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை மேற்கு இறை அறுகு வெளி செர்பரப்பு 20. இதற்கு எல்லை கிழக்கு முகமது சுலுத்தான் அப்துல்காதிறவுத்தம் மறுபேருக்குமுடைய வாதனங்கள், வடக்கு கிருட்டினர் கதிரேசபிள்ளையுடைய வாதனம், மேற்கு அம்பலவாணர் நாகருடைய வாதனம், தெற்கு எஸ். பொன்னுத்துரையுடைய வாதனம் இதிற் சொரியலாய் அரைவாசி.

இதைப்பற்றி வேறு ஏதாகுதல் அறிய விரும்பினல், கனம் தங்கிய பிறக்டர் வண்ணார்பண்ணை மேற்கு ஐயனார் கோவிலடி க. வை. நவரட்டினம் அவர்களிடம் அறியலாம்.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனர்
6-7-55.
M 76 8-7 (து 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. சாம்பன் ஊர்காவற்றுறை எஸ் பிரான்சிஸ்
2. ஷையூர் பெண் அன்னம்மா வழக்காளிகள்.

இல. 10685

எதிராக

ஊர்காவற்றுறை சரவணை முருகர் ஐயம்பிள்ளை

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10685 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ஆம் ஆவணி மீ 6உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 494/75ம் ரூபா 250/=க்கு 11-1-54 தொடக்கம் 16-3-1954 வரைக்கும் 18 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும கோட்டுச் செலவு ரூபா 111-90 சதம் இதில் ரூபா 250/= அறவு பண்ணியாய்விட்டது.

### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணைபிறை "சமமாலைச்சீமாவும் செட்டகொல்லைச் சீமாவும்" பாகெ இல 4 கிணறும் வீடுகளும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் வயிரவர் கோவிலாதனமும் வடக்கு ஒழுங்கை. மேற்கு சினப்பு தம்பிப்பிள்ளையின் ஆதனம். தெற்கு நாகலிங்கம் கார்த்திகேசுவிற்குரிய ஒழுங்கைப் பாவிப்பு நிலம் இடங்களும்.

1955ம்ஆம் ஆனிமீ 17ம திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
M. 75 8—7—55. (து. 200)

## இலங்கா ஆயுள்வேதக் கல்லூரி யாழ்ப்பாணம்

## வருடாந்தப் பரீக்ஷை முடிவுகள்-1955

வட இலங்கை சுதேச வைத்திய சபையார், சென்ற பங்குனி (மார்ச்) மாதம் நடந்த வருடாந்தப் பரீக்ஷையில் சித்தியடைந்தவர்களின் பெயர்களைத் தாரதர ஒழுங்கின்படி பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்கள்.

விசேட வகுப்பு:

1. S சிவானந்தம் 3-ம் பிரிவு.

நான்காம் வகுப்பு

ஒருவருமில்லை.

மூன்றாம வகுப்பு

1. N. பாலகிருஷ்ணன் 3-ம் பிரிவு
2. V கந்தசாமி ,,
3. S. சிவசம்பு ,,
4. V. தங்கக்கணபதி ,,

இரண்டாம் வகுப்பு

1. M. சுப்பிரமணியம் 2-ம் பிரிவு
2. N. உருத்திரசிங்கம் 3-ம் ,,

முதலாம வகுப்பு

1. R. கந்தையா 2-ம் பிரிவு
2. V. மயில்வாகனம ,,
3. S இராசவேலு 3-ம் ,,
4. V. திருநாவுக்கரசு ,,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வட்டுக்கோட்டை கிழக்கு எஸ். சின்னத்தம்பி பொன்னையா

—வழக்காளி

இல. 10984

விரோதமாக

மானிப்பாய் ஆறுமுகம் குமாரசாமி — எதிரி

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப்பிரகாரம் இதன் கீழ்க் காணப்படும் காணி 1955 ம் ஆண்டு ஓகஸ்டு மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை (ஆடி 28) முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

பெ. முத்துத்தம்பி

வெந்தீஸ் கமிஷனர்
சுதுமலை தெற்கு மானிப்பாய்
1955 ம் ஆ ஜூன் மீ 28 உ

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 1679-ம் இதில் ரூபா 1500க்கு 30-3-1954 தொடக்கம் 5-10-1954 வரை வருடம் 1க்கு 100-க்கு 8வீதவட்டியும் அதன் பின் மொத்தத்தொகைக்குஇறுக்குந்திகதி வரையும் ஆல் 1-க்கு 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா. 173—68 ம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு, மானிப்பாய்க் கோயிற்பற்று, மானிப்பாயிறை. எளுமுள்ளியும், தியாக தோட்டம் அல்லது தியாகதோட்டை ஒழுங்கையுடன் கி. பா. 5. குளி 8-ம் செய் – வான்பயிர்களும் இக்காணிக்கு வடகிழக்கே இருக்கும் கிணற்றில் பங்கும், தூர்வைப் பங்கும். இக்காணியிலிருந்து குறித்த கிணற்றிற்குப் போக்குவரவு செய்யவிடப்பட்ட வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லைகிழக்கு இலகுப்பிள்ளை கந்தையா பெண் இரத்தினத்துக்குரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு கையொழுங்கைமுகப்பும், மாணிக்கவாசகர் பெண் தங்கம்மாவின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும், E. 231/25-ல் பதிவு - இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளும்.

பெ. முத்துத்தம்பி

வெந்தீஸ் கமிஷனர்
28-6-55.
M .72 8 7—55. (து. 100)

## திருக்கேதீச்சரம்

நிகழும் ஆடி(யூலாய்)மாதம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமை திருக்கேதீச்சரத்தில் வருடாந்த சங்காபிஷேகம் நிகழும். மாலை மேளக் கச்சேரியும், சைவப் பிரசங்கங்களும், தேவார பாராயணமும், இரவு சுவாமி திருவீதி எழுந்தருளும் மணவாளக்கோல உற்சவமும் நடைபெறும். அத் தருணம் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் ஆதரவில் கீழ்க் காணும் அடியார்கள் சைவப் பிரசங்கங்கள் நிகழ்த்துவார்கள்.

1. திருப்பணிச் சபைத் தலைவர் கௌரவ சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்.
2. திரு. C. சிற்றம்பலம் அவர்கள் M. P.
3. திரு. K. ஆழ்வாப்பிள்ளை அவர்கள்
4. ஸ்ரீ. குகானந்தவாரியார் அவர்கள
5. திரு. M. இரகுநாதன் அவர்கள்
6. திரு. M K. முத்துச்சாமி அவர்கள்
7. திரு. M. கந்தசாமி அவர்கள்.

யாத்திரீகர்களுக்கு உணவு, குடிதண்ணீர்,போக்குவரத்து வசதி, சுகாதார ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இருவாரப் பலன்கள், 10—7—55 —— 16—7—55

**மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உம்முடைய தாயாருடைய தேகசுகம் இந்தவாரம் தாக்குப்படும். சிறு அபாயங்களுக்குமிடமுண்டு இனத்தவர்கள் உமக்கு அதிக செலவை உண்டாக்குவர். வார இறுதி உத்தியோக கருமங்களுக்கு நல்லதாய் இருக்கும்

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் முழுதும் கருமங்கள் தொடர்ந்து குழப்பமாகவே இருக்கும். நீர் அசிக கண்டனங்களையும் இடைஞ்சல்களையும் முன்னிட வேண்டி வரும். ஆனல் கடைசியில் உம்முடைய எண்ணப்படி நடக்கும். வார இறுதியில் செலவு மிக அதிகமாயிருக்கும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை,புனர்பூசம் 1,2,3**

இந்தவாரம் எதிர்ப்புகளிற் பல நீங்குதலை நீர் காணபீர். தேகசுகம் திருந்தும். கருமங்கள் ஒழுங்கு பண்ணுவது மிக இலகுவாயிருத்தலை நீர் காண்பீர். நண்பர் விசேடமாகப் பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பர்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் வேலை அதிகமாயிருக்கும் ஆனல் சித்தியெய்துவது பற்றியும் நலல பெறுபேறு பெறுவது பற்றியும் நீர் நிச்சயமாயிருக்கலாம். தேகசுகம் அதிகம் நல்லாயிராது. தலைபிடிக்கும் கண் நோய்களுக்குமிடமுண்டு.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் இரகசியப் பகைவரைப்பற்றிக் கவனமாயிருக்கவும். எந்த ஒரு புதுக்கருமமும் கொஞ்சநாட்களுக்குப் பின் போடப்பட வேண்டும். வார இறுதியில் உம்முடைய முயற்சிகளில நண்பர் உதவி செய்வர் இழிமொழி பரப்புவோர் உமமுடைய மனச் சமாதானத்தைப் பழுதாக்கக்கூடும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம.**

உத்தியோக காரியங்களுக்கோ அல்லது வியாபாரக் கருமங்களுக்கோ முதல் மூன்று நாட்களும் மிக நலலாயிருக்கும. பணநிலைமை திருந்தும். புதனும் வியாழனும் உம்மைச் சிறிது கலைக்கும. வார மிகுதி திரும்பவும் நன்றாகும்.

**துலாமசித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம் பாதம்**

நல்ல பலனைத் தரும் புதிய முயற்சிகளுக்கு இது நல்ல வாரமாயிருக்கும். தனலாபம் நிசசயம. இடைஞ்சல்களிலிருந்து நீங்க உமமுடைய நண்பர் உமக்கு உதவி செய்வர். சமூக சித்தியும் நிச்சயம். கடைசி இருநாட்களும் கவனமாய்க் கழிக்க வேண்டும.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம, கேட்டை.**

தேகசுகம் தொடர்ந்து சிக்கலாகவே யிருக்கும். பணத்துறையில் நல்லவாரம். ஆனல் உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. வார இறுதியில் பிதாவழி இனத்தவர் உமக்குச் சில தொந்தரவுண்டாக்கக் கூடும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

குடும்பத் தொந்தரவுகள் இன்னும் நீங்கவில்லை. உங்களுட் சுகவீனம் உம்மை அதிகம் வருத்தும். சுற்றோரில் தொந்தரவுகளுக்கு மிடமுண்டு. கோபத்தைதடக்குக.

**மகராசி உத்தராடம் 2,3,4 பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் நீக்கக் கூடியதாயிருக்கும். தனலாபம் நிச்சயம். ஆனல குடும்பப் பகுதியில் எல்லாம் நலலாயிலலை. சில பிழை எண்ணங்களுக்கிடமுண்டு.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

எதிர்ப்பு ஒழிந்துவிடும். இந்த வாரம் சில விசேட காரியங்களில் நீர் தீர்மானஞ் செய்யக்கூடியதாகும் நண்பர் அதிக உதவியாயிருப்பர். தனலாபமும் நிசசயம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

இந்த வாரம் நீர் தீர்மானஞ் செய்வதில் தளம்புவீர். வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும். உணர்ச்சி வேகத்தால் [illegible] உறுதியாய் இருக்கவும், நீர் சித்தியெய்துதல் நிச்சயம்

## பிரகடனம்

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர் : ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00,

செந்தமிழ் மொழிவளம் : எங்கள் தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும்பயிற்றுவது; தமிழ்ஆங்கில ஆரம்ப மாணவர் தொடக்கம் S. S. C. மாணவர் தமக்கும் இன்றியமையாதது; பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை புதிய முறையில் இயற்றியது. விலை: 1—60 சதம்.

☞ கதிர்காம வேலர் திருவருட்பா: மேற்படி பண்டிதர் எழுதிய உரையுடன். ச. 50

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

சிவராத்திரி விரத மான்மியம் (வசனம்) விலை சதம் 25.

அரிச்சந்திரபுராணம்-மயானகாண்டம் பண்டிதர் ம வே. தி.ச. எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு. நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. [இலங்கை அரசினர் பாடபுத்தக பரிசீலனைச் சபையாரின் அங்கீகாரம பெற்றது.] விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—25 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1-00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

**முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.**

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarpannai, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலைநிலத்தின் பயங்கரத் தோற்றம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

பாம்புகள் கக்கிய மணிகளும் அங்கும் இங்கும் சிதறுண்டு கிடக்கும். அவை கொடிய அக்கினியினாலே பூமாதேவியெனும் பெண்ணினது மேனி கொப்புளம் கொண்டுள்ள தன்மை போல விளங்குகின்றன. மான்கள் எங்கும் ஓடி இளைத்துப் போகின்றன. வெயிலே தகிக்கிறது ஒதுங்க இடமில்லை. அந்த வனத்தில் எரிந்து நின்ற கள்ளிகளைக் கண்டன. அந்தக் கள்ளிகளோ எரிந்து சுருங்கி நிற்கின்றன. யானை ஒதுங்கப் போதியதல்ல. உலகத்தாரால் இகழப்படுகின்ற வறுமை வந்தால் எவ்வளவு பெரியோர் ஆயினும் இழிந்தோரிடத்திலும் ஒருபொருளை வேண்டிச் செல்லத்தான் வரும். அதுபோல தன் கால்களால் இலகுவாக மிதித்து விட்டுச் செல்லும் கள்ளியின் நிழல் யானைக்கு இப்போது தேவையாயிருக்கின்றது.

ஆதவன்றானும் கடக்க அஞ்சும் அக்கடுஞ் சுரம். அதன்வழியே சூரனைச் சங்காரம் செய்ய அறுமுகப் பெருமானும் அமலன் வருகிறார். பிரபஞ்சமாகிய ஆசைக் கடலுள் அழுந்தும் சிற்றறிவு கொண்ட மனம் முதலிய கருவிகள் சிவன்கருணை பெற்றழி உண்மையான அறிவைப் பெற்றதுபோல அக்கடுஞ் சுரம் குளிர் சோலையாய் மாறிவிட்டது.

பழனி ஆண்டவருக்கு
அபிஷேகமான
**பஞ்சாமிர்தம்**
பிரசாதங்கள் செலவு அடங்கிய
பெட்டி 1-க்கு ரூ 4-12 0
மற்ற விபரங்களுக்கு எழுதவும்
S. P. முத்து சுந்தரக் குருக்கள்
ஆண்டவர் கோவில் பூஜை பழனி

உ

## சிதம்பரம் ஸ்ரீ. நடராசப் பெருமான்
# கும்பாபிஷேகம்

### பண வரவு

திருமதி. T. தங்கரத்தினம், வட்டு - மேற்கு, வட்டுக்கோட்டை 5.00
,, P, பொன்னம்மா மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் 5.00

யாழ்ப்பாண விஸ்வகர்மா மகா சங்கம், 8 கெலன்கடுவ பிளேஸ், வெள்ளவத்தை 42.00

52.00

இத்தொகை சிதம்பரத்துக்கு அனுப்பப்படுகிறது.

வண்ணார்பண்ணை
5-7-55.

E. P. இராசையா
கௌரவ தனாதிகாரி
சைவபரிபாலனசபை.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்


1942-ம் ஆண்டின் 13ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசன்ஸ் பெற்ற அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் 233 K K S. ரோடு பெ. அரு. மு. முத்துச்சாமிசெட்டியார் அன்சன்ஸ் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படிசட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம்பர் | உ மீ ஞூ | கொடுத்தரூபா | ஊர் பெயர் நகைவிபரம் |
|---|---|---|---|
| 13794 | 17-3-53 | 60 | கைலாசபிள்ளையார்கோவில் மேற்கு வீதி இளையதம்பி வேலுப்பிள்ளை பழுது அக்ஷரக்கூடு 1 |
| 13795 | ,, | 50 | திருநெல்வேலி தெற்கு சின்னையா குணரெத்தினம் பழுதுமாத்துவிட்ட விலாசம்போட்ட மோதிரம் 1 |
| 13869 | 21-3-53 | 43 | மானிப்பாய் வடக்கு பொன்னையா அருமைத்துரை தாலி 1ம் குண்டு 1ம் திருகில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி 2 |
| 14541 | 27-4-53 | 21 | மானிப்பாய்தெற்கு காசிப்பிள்ளை ராசதுரை இமி வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 14731 | 5 5-53 | 13 | தலையாளி சரவணப்பெருமாள் பொன்னம்பலம் இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 15079 | 20 5-53 | 25 | உரும்பராய்கிழக்கு வேலுப்பிள்ளை அரியகுட்டி பழுது இமிகல் அக்ஷரக்கூடு 1 |
| 15383 | 3-6-53 | 6 | அனலைதீவு ஆறுமுகம் வயித்தியநாதர் இமி வெ கல் காதுக்குச்சி சோடி 1 |
| 15627 | 15-6 53 | 31 | திருநெல்வேலிகிழக்கு மயில்வாகனம் துரையப்பா சில கல்லில்லாத இமிகல் கொண்டைப்பூ |
| 15711 | 19 6-53 | 11 | கோண்டாவில்கிழக்கு முத்தையா சபாரெத்தினம் சில கல்லில்லாத இமி வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடி 1 |
| 15790 | 22-6-53 | 18 | கன்னாதிட்டி சுப்பிரமணியம் செல்லையா இமி வெள்ளை நீலம் கட்டிய தொங்கட்டான் சோடி 1 |
| 15895 | 27 6 53 | 26 | கொழும்புத்துறை W. J. ஸ்பென்சர் பழுது விலாசம்போட்ட பொட்டு 1 |
| 15980 | 1-7 53 | 33 | இந்துகாலேஜ் ஒழுங்கை வேலுப்பிள்ளை சண்முகம் கம்பிக்காப்பு 1 |
| 16041 | 4-7-53 | 80 | நாவாந்துறை மரியான் அந்தோனி கிளாவர் மோதிரம் 1ம் இமி வெள்ளைக் கல் நீலம்கட்டிய மோதிரம் 2 |
| 16075 | 6-7-53 | 23 | மண்டதீவு முத்து நடேசபிள்ளை இமி வெள்ளைக்கல் தோடு சோடி 1 |
| 16359 | 18-7-53 | 20 | இந்துகாலேஜ் நாகமுத்து கணபதிப்பிள்ளை பழுது முருக்குப் பிள்ளைக் காப்பு சோடி 1 |
| 16407 | 20-7-53 | 35 | இணுவில் மேற்கு சிதம்பரநாதர் பொன்னையா திருகில்லாத இமிகல்தோடு சோடி 1 |
| 16425 | 21-7-53 | 7 | கச்சேரியடி மேற்கு சின்னத்தம்பி சதாசிவம் மோதிரம் 1 |
| 16497 | 25-7-53 | 10 | நாவாந்துறை தெற்கு அந்தோனிமுத்து முத்தையா இமி வெள்ளைக்கல் தொங்கட்டான் சோடி 1 |
| 16501 | ,, | 18 | சில்லாலை சந்தியாப்பிள்ளை ஞானப்பிரகாசம் இமி கல் தோடு சோடி 1 |
| 16532 | 27 7-53 | 58 | நாவாந்துறை பொன்னர் கந்தையா இமி வெள்ளை நீலம்கட்டிய புரூச் 1 |
| 16588 | 30-7-53 | 25 | கொக்குவில்கிழக்கு வயிரலிங்கம் குமாரு இமி வெள்ளைக்கல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி சோடி 1 |
| 17383 | 8-9-53 | 11 | நாவலர் ரோடு ராமானுஜம் ராமகிருஷ்ணன் இமி கல் மோதிரம் 1 |
| 17470 | 13-9-53 | 50 | ஓட்டுமடம் சின்னப்பு பொன்னையா முருக்குப்பிள்ளைக்காப்பு சோடி 1ம் பஞ்சாயுதம் . |
| 17518 | 16-9-53 | 6 | கன்னாதிட்டி செல்லையா இராசேந்திரன் கட்டி 1 |
| 17534 | ,, | 25 | கன்னாதிட்டி செல்லையா இராசேந்திரன் கட்டி 1 |
| 17569 | 19-9-53 | 15 | கோப்பாய் தெற்கு சந்தியா ஞானம் காவடி இல்லாத பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 17824 | 6 10-53 | 45 | மண்கும்பான் ஆறுமுகம் நாகராசா திருகும் சில கல்லுமில்லாத இமி கல் தோடு சோடி 1 |
| 17826 | ,, | 20 | கஸ்தூரியார்ரோட் கந்தையா ஐயம்பிள்ளை தாலி 1 ம் குண்டு 2 |
| 18376 | 4-11-53 | 25 | ஆரியர்குளம் நாகலிங்கம் நடராசா தாலி 1 |
| 18409 | 5-11-53 | 10 | நாவாந்துறை தெற்கு பிலிப்பு பிலேந்திரன் சில கல்லில்லாத இமி வெள்ளைகல் தோடு சோடி 1 |
| 18422 | ,, | 16 | நல்லூர் வடக்கு சின்னப்பு அருணாசலம் இமி கல் தோடு சோடி 1 |
| 18442 | 7-11-53 | 13 | கிளிநொச்சி சி. செ மரியாம்பிள்ளை பழுது மோதிரம் 1 |
| 18633 | 14 11-53 | 20 | நாவலர் ரோட் வேலாயுதம் மயில்வாகனம சிகில் மோதிரம 1 |
| 18776 | 20-11-53 | 6 | நவாலி வடக்கு விசுவலிங்கம் கணேசு வளையமில்லாத இமி வெள்ளைக்கல் தொங்கட்டானுடன் காதுக்குச்சி சோடி 1 |
| 18779 | 21-11-53 | 213 | சோனகதெரு சுல்தான் சிக்கந்தர் சுல்த்தான அப்துல்க்காதர் மட்டப்பொன அல்கொத்து 31 |
| 18790 | ,, | 45 | இணுவில் கிழக்கு வேலுப்பிள்ளை தருமலிங்கம் இமி கல் தோடு சோடி 1 |
| 18800 | ,, | 21 | ஐயனார் கோவிலடி ஐயாத்துரை தம்பிராசா வெள்ளிக்கம்பியுடன் சில கல்லில்லாத இமி வெள்ளைக்கல் கொண்டைப்பூ 1 |

விற்பனவு மன்மத ஞூ ஆடி மீ 14-ந் திகதி (30-7-55) சனிக்கிழமை காலை 10மணி தொடக்கம் மேற்படியார் கடையில் எடுபட்ட நகைகள் பிறகேலாக மீதி நகைகள் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

5-7-55 M. 7 8,15-7

S. Pasupathy Chettiar
வெக்தீஸ் மேஸ்தர்




# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியசோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.

S. கனகசபை
சிறுப்பர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpannai. Jaffna on Friday July, 8 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org